## மியாட் மருத்துவமனை சார்பில்

# ஆசியாவிலேயே முதல் முறையாக மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம்

சென்னை, ஏப்.18-

மியாட் மருத்துவமனை சார்பில், ஆசியாவிலேயே முதல் முறையாக மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம் துவக்கப்பட்டது. அருங்காட்சியகத்தை மியாட் மருத்துவமனை சேர்மன் மல்லிகா மோகன் தாஸ் நேற்று திறந்து வைத்தார்.

சென்னை மூட்டு சீரமைப்பு தொடர்பாக நோயாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. மியாட் மருத்துவமனையில் இதுவரை 30 ஆயிரம் இடுப்பு மற்றும் முழங்கால் மூட்டு மாற்று சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்துடன் இணைந்து 10 ஆயிரம் முழங்கால் மூட்டுகளை பெற்று நோயாளிகளுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளது. அருங்காட்சியக தொடக்க நிகழ்ச்சியில் மருத்துவமனை இயக்குனர் மோகன்தாஸ், 'எங்களிடம் வரும் நோயாளிகளை முற்றிலும் குணப்படுத்தி, அவரவரின் உடல்நிலைக்கு ஏற்ப வாழ் நாள் முழுவதும் பொருந்த கூடிய செயற்கை மூட்டினை எங்களால் அளிக்க முடியும்' என்றார்.

மேலும், தற்போது மியாட் மருத்துவமனை இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சையை எப்படி சிறப்பாக செய்து வருகிறது என்பதை, காணொலி காட்சி மூலம் விளக்கினார்.